**மதுக்கரை நகராட்சியில் 21.04.2023ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

மதுக்கரை நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.123 நாள்.25.01.2023ன்படி மதுக்கரை நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் 11.67 டன் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை ஆட்கள் மற்றும் வாகனங்களை கொண்டு சேகரித்து முறையாக கையாள்வதற்கு ஒரு டன்னிற்கு ரூ.5663/– என கட்டணம் நிர்ணயம் செய்து மூன்றாண்டுகளுக்கு வெளிக்கொணர்வு முகமையை நியமிக்க திறந்த ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கவும், இதற்காகும் ஓராண்டு உத்தேச மதிப்பீட்டு செலவு ரூ.286.67 லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரத்திற்கு கடந்த 29.03.2023ல் ஆன்லைன் மூலம் திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீட்டைவிட கூடுதல்/ குறைவு சதவீதங்கள் |
|---|---|---|
| 1 | ஜெய்சூர்யா இன்டஸ்ட்ரீஸ்<br>13/2 முருகம்பாளையம்,<br>ஓடக்காடு, முத்துசாமி வீதி<br>திருப்பூர் | ரூ.287.66 லட்சம் |
| 2 | தி/வா. மார்க் இன்ஜினியரிங்<br>1268/1 சூரியநல்லூர் கிராமம்<br>தாராபுரம் ரோடு,<br>தாராபுரம். | ரூ.290.30 லட்சம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக விலை விகிதம் கோரியதால் குறைவாக விலைவிகிதம் வழங்க கேட்டு (Negotiation Letter) கடிதம் அனுப்பப்பட்டதில் மதிப்பீட்டைவிட 0.65% குறைவு செய்து கடிதம் வழங்கியுள்ள திருவாளர் ஜெய்சூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் நிறுவனத்தாரின் விலை குறைப்பு கடிதத்தினை ஏற்று அன்னாருக்கு 01.05.2023 முதல் வேலை செய்ய ஒப்பந்தத்தை உறுதி செய்து வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1570/2023/அ1).

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.140**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.02**

**1920**ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **15**ன் கீழ் செயலாட்சி அதிகாரியின் நெருக்கடி கால அதிகாரங்களின்படி அவசர அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வேலை விபரப்பட்டியல்கள்.

| வரிசை. எண் | அவசர அவசிய பொது வேலைகள் விபரம் | செலவினத் தொகை ரூபாய் |
|---|---|---|
| **1** | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட **7**வது வார்டு ராக்கியண்ணன் கோவில் வீதி பகுதியில் குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு புதியதாக பூஸ்டர் மோட்டார் பொருத்தியதற்கான செலவினம் மேற்கொண்டது. | **ரூ.40312/–** |

பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட விபரத்திற்கான அவசர அவசியப் பணியினை உடனடியாக செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்தமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.877/2022/அ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.141</u>**

பதிவு செய்யப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 26.04.2023

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி